டிஜிட்டல் பயணச்சீட்டுக்கு கட்டண தள்ளுபடி:

# மெட்ரோ ரெயிலில் ஜனவரி மாதம் 13.43 லட்சம் பேர் பயணம்

## அதிகாரிகள் தகவல்

சென்னை, பிப்.3-

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இருந்த நிலையில் தற்போது தளர்வுகள் படிப்படியாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ந் தேதியில் இருந்து சென்னையில் மெட்ரோ ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. அதனை தொடர்ந்து தற்போது சற்று முன்னேற்றம் அடைந்து வருகிறது. செப்டம்பர் 7-ந் தேதியில் இருந்து கடந்த ஜனவரி 31-ந் தேதி வரை 49 லட்சத்து 96 ஆயிரத்து 141 பேர் பயணம் செய்துள்ளனர். இதில் ஜனவரி மாதம் மட்டும் 13 லட்சத்து 43 ஆயிரத்து 695 பேர் பயணித்து உள்ளனர்.

டிஜிட்டல் முறையில் டிக்கெட் பெறும் வகையில் கியூ.ஆர். குறியீடு பயணச்சீட்டு முறை மூலம் 1 லட்சத்து 9 ஆயிரத்து 505 பேரும், பயண அட்டை பயணச்சீட்டை பயன்படுத்தி 24 லட்சத்து 80 ஆயிரத்து 185 பேரும் மீதம் உள்ளவர்கள் டோக்கன் முறையை பயன்படுத்தி பயணம் செய்து உள்ளனர். இதில் கியூ.ஆர். குறியீடு பயணச்சீட்டுக்கு 20 சதவீதமும், பயண அட்டைகளுக்கு 10 சதவீதமும் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மேற்கண்ட தகவல்களை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.